புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635    T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 276 | 11-04-2026 | சனி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி

Volume 01 | Issue: 276 | 11-04-2026 | Saturday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## பொது சிவில் சட்டம், மகளிருக்கு ரூ.3,000 மேற்கு வங்க பாஜக தேர்தல் அறிக்கை அம்சங்கள்




கொல்கத்தா: ஏப்.11

பாஜக ஆட்சி அமைந்ததும் ஆறு மாத காலத்தில் மேற்கு வங்கத்தில் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப் படும் என அம்மாநில தேர்தலை முன்னிட்டு பாஜக வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்க சட்டப் பேரவைத் தேர்தல் இரண்டு கட்டங்களாக வரும் 23 மற்றும் 29 ஆகிய தேதிகளில் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறி வித்துள்ளது. தேர்தலை முன்னிட்டு ஆளும் திரிணமூல் காங்கிரஸ் கட்சி, பாஜக, இடது முன்னணி கூட்டணி மற்றும் காங்கிரஸ் கட்சி தனித்தனியாக போட்டியிடுகின்றன. இந்தச் சூழலில் மேற்கு வங்க மாநில பாஜக தேர்தலை அறிக்கையை நேற்று மத்திய அமைச்சர் அமித்ஷா வெளியிட்டார். இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் இவை...

› 15 ஆண்டுகால திரிணமூல் காங்கிரஸ் ஆட்சியின் ஊழலையும், சட்டம் ஒழுங்கு சீர்குலைவையும் அம்பலப்படுத்தும் வகையில் வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யப்படும்.

› பாஜக ஆட்சிக்கு வந்த ஆறு மாத காலத்தில் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்படும்.

› பெண்களுக்கு மாதம் ரூ.3,000 வழங்கப்படும்.

› நாட்டின் பாது காப்பை உறுதி செய்ய ஊடுருவல்களுக்கு எதிராக கடும் நட வடிக்கை எடுக்கப்படும்.

› கால்நடை கடத் தலைத் தடுக்க கடுமையான சட்டம் இயற்றப்படும்.

› மேற்கு வங்கத்தில் பாஜக அரசின் அனைத்து திட்டங்களும் அமல்படுத்தப்படும். இதில் ஆயுஷ்மான் பாரத் திட்டமும் அடங்கும்.

› ஆட்சிக்கு வந்த 45 நாட்களில் 7வது ஊதியக் குழு பரிந்துரையின்படி அரசு ஊழியர்கள், ஓய்வூதியர்களுக்கு அகவிலைப்படி (டிஏ) வழங்கப்படும். 7வது ஊதியக் குழு அமல்படுத்தப்படும்.

› ஐந்து ஆண்டுகளில் ஒரு கோடி புதிய வேலைவாய்ப்புகள், சுயதொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். வேலையற்ற இளைஞர் களுக்கு ரூ.3,000 நிதி உதவி வழங்கப்படும்.

› அரசியல் வன்முறைகள் குறித்து ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஆணையம் அமைத்து விசாரிக்கப் படும். இதில் கட்சி வித்தியாசம் இருக்காது.

› சட்டம் ஒழுங்கு உறுதி செய்யப்படும். பெண்களுக்கான பிரத்யேக காவல்படை உருவாக்கப்படும்.

› 33% இடஒதுக்கீடு வழங்குவதன் மூலம் பெண்களின் பாதுகாப்பு மற்றும் அதிகாரமளித்தல் உறுதி செய்யப்படும்.

› மத வழிபாடுகளின் சுதந்திரத்தை உறுதி செய்யும் சட்டம் இயற்றப்படும்

## லெபனான் மீதான தாக்குதலை நிறுத்தும் வரை அமெரிக்கா உடன் அமைதிப் பேச்சு இல்லை: ஈரான் உறுதி

தெஹ்ரான்: ஏப்.11–

லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதல் நிறுத்தப்படும் வரை அமெரிக்காவுடன் அமைதிப் பேச்சு வார்த்தை கிடையாது என்று ஈரான் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

அமெரிக்கா ஈரான் இடையே அமைதிப் பேச்சுவார்த்தை பாகிஸ்தான் தலைநகர் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை பாகிஸ்தான் அரசு மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதலை சுட்டிக்காட்டியுள்ள ஈரான், அந்த தாக்குதல் நிறுத்தப்பட்டால் மட்டுமே அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈரான் பங்கேற்கும் என்று அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஈரானின் தஸ்னிம் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், 'அமைதிப் பேச்சுவார்த்தை நிச்சயமற்ற நிலையிலேயே உள்ளது. எத்தகைய சூழ்நிலையையும் எதிர்கொள்ள ஈரான் தயாராக உள்ளது.

ஈரான் மற்றும் எதிர்ப்பு இயக்கங்களுக்கு (ஹிஸ்புல்லா) சாதகமான முடிவுகள் இல்லாமல் முடிவடையும் ஒரு போர் நிறுத்தத்தின் விளைவுகளில் இருந்து அமெரிக்காவால் எந்த வகையிலும் தப்பிக்க முடியாது.

ஈரானும் எதிர்ப்பு சக்திகளும் விரும்பும் ஓர் உடன்பாட்டுக்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் ஒப்புக் கொண்டால் மட்டுமே பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் காணும். இல்லையென்றால் அமெரிக்காவும் இஸ்ரேலும் மீண்டும் தாக்குதலுக்கு உள்ளாகும்' என்று ஈரான் அரசு தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ள தாக குறிப்பிடப்பட் டுள்ளது.

முன்னதாக, ஈரான் அதிபர் மசூத் பெசஷ்கியான் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "லெபனானுக்குள் இஸ்ரேல் மேற்கொண்ட ஊடுருவல், ஆரம்ப கால போர் நிறுத்த ஒப்பந்தத்தின் அப்பட்டமான மீறலாகும். இது, சாத்தியமான உடன்படிக்கைகளுக்கான அர்ப்பணிப்பின்மையின் அபாயகரமான அறிகுறியாகும்.

இந்த நடவடிக்கைகள் தொடர்ந்தால், பேச்சுவார்த்தைகள் அர்த்தமற்றதாகிவிடும். எங்கள் விரல்கள் தொடர்ந்து துப்பாக்கியின் விசையின் மீதே இருக்கும். ஈரான் தனது லெபனான் சகோதர சகோதரிகளை ஒருபோதும் கைவிடாது" என தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, ஈரானும், அமெரிக்காவும் போர் நிறுத்தத்தை அறிவித்த பின், லெபனான் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் 100 ஏவுகணைகளை ஏவி 254 பேரை கொன்றது. இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தி ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் மூடியுள்ளது. இதனால் சண்டை நிறுத்தத்தில் குழப்பமான சூழல் ஏற்பட்டது கவனிக்கத்தக்கது.

# மக்கள் நலன் சார்ந்த, அனைவரையும் உள்ளடக்கிய ஆளுகையுடன் கூடிய வளர்ச்சிக்கு உறுதிபூண்டுள்ளோம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் பதிவு

சென்னை: ஏப்.11–

மாநில உரிமைகளிலோ கூட்டாட்சியிலோ சமரசம் இல்லை: கண்ணியத்திற்கும் சுயமரியாதைக்கும் ஆம். திணிப்புக்கு இல்லை: மக்கள் நலன் சார்ந்த, அனைவரையும் உள்ளடக்கிய ஆளுகையுடன் கூடிய வளர்ச்சிக்கு உறுதிபூண்டுள்ளோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

"திராவிட மாடல் 2.0 அரசு மீண்டும் அமைய வேண்டும்" இதுவே தமிழகம் முழுவதும் உள்ள மக்களின் உணர்வாக இருக்கிறது. எண்ணற்ற நலத்திட்டங்களைச் செயல்படுத்தி, தமிழகத்தை ஒரு 'சூப்பர் ஸ்டார்' மாநிலமாக உயர்த்திய திராவிட மாடலால் மட்டுமே, மாநிலத்தை தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் வழிநடத்த முடியும் என்ற உறுதியான நம்பிக்கை மக்களிடையே நிலவுகிறது.

பேரறிஞர் அண்ணா கூறியது போல, நாங்கள் எப்போதும் மக்களுடனேயே இருந்து, அவர்களுக்காகவே அயராது உழைத்து வருகிறோம். அதனால்தான் மக்கள் எங்கள் மீது அளவற்ற நம்பிக்கையையும் பாசத்தையும் கொண்டிருக்கிறார்கள். இந்த நம்பிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறதே தவிர, சற்றும் குறையவில்லை. நான் மிகவும் வியந்து போற்றும் ஒரு விஷயம் என்னவென்றால், திராவிட மாடல் அரசின் திட்டங்களை நான் பட்டியலிடுவதற்கு முன்பாகவே, கூட்டத்தினர் அத்திட்டங்களின் பெயர்களைக் கூறி முந்திக்கொண்டு பதிலளிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். இது திமுக அரசுக்கு ஆதரவான, 'ஆட்சியைத் தொடர விரும்பும்' (ஜீக்ஷீஷீவீஸீநீஷுனிதீமீஸீநீஹ்) அலை ஒன்று வீசுவதைக் காட்டும் தெளிவான அறிகுறியாகும்.

உங்கள் அரசு அறிமுகப்படுத்திய அனைத்து நலத்திட்டங்களிலும், பயனடைந்த மக்களின் எண்ணிக்கை அல்லது அது ஏற்படுத்திய தரமான மாற்றம் ஆகிய அடிப்படையில், உங்களுக்கு மிகவும் பிடித்த திட்டம் என்று எதைக் குறிப்பிடுவீர்கள்?

'விடியல் பயணம்', 'புதுமைப் பெண்', 'நான் முதல்வன்' மற்றும் 'அன்புக்கரங்கள்' ஆகிய திட்டங்கள் அனைத்தும் எனக்குப் பிடித்தமானவை என்றாலும், என் இதயத்திற்கு மிகவும் நெருக்கமான இரண்டு திட்டங்கள் உள்ளன.

முதலாவது, 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்டமாகும். தங்கள் குடும்பத்திற்காகவும், தமிழகத்தின் முன்னேற்றத்திற்காகவும் எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி, தங்கள் உழைப்பிற்கு எவ்வித அங்கீகாரமும் இல்லாமல் அயராது உழைக்கும் பெண்களைப் போற்றும் வகையிலேயே நாங்கள் இத்திட்டத்தை அறிமுகப்படுத்தினோம். இது பெண்களின் அதிகாரமளித்தலில் அடுத்த கட்டத்தை எட்ட வழிவகுத்துள்ளது.



நீங்கள் இந்தத் தேர்தலை, தமிழ்நாட்டிற்கும் டெல்லிக்கும் இடையிலான ஒரு மோதலாகச் சித்தரிக்கிறீர்கள். "இந்தத் தேர்தல்கள் தமிழ்நாட்டிற்கானவை; ஆனால், அரசின் தோல்விகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவே நீங்கள் டெல்லியை இலக்காகக் கொள்கிறீர்கள்," என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி கூறுகிறார். இதற்கு உங்கள் பதில் என்ன?

தமிழ்நாட்டுத் தேர்தலில் டெல்லியின் தலையீடு ஏதுமில்லை என்றால், தங்கள் கூட்டணியின் தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தைகளுக்காகக்கூட பழனிசாமி ஏன் டெல்லிக்கு ஓடினார்? மாநில மக்களை நேரடியாக எதிர்கொண்டு, அவர்களின் ஆதரவைப் பெற இயலாத பா.ஜ.க., அ.தி.மு.க.வின் துணையோடு தமிழ்நாட்டிற்குள் நுழைய முயல்கிறது என்பது சூரியனைப் போலத் தெளிவான உண்மை. இந்தத் தேர்தல் என்பது 'தமிழ்நாடு அணிக்கும் 'டெல்லி அணிக்கும் இடையிலான நேரடிப் போட்டியே ஆகும். தமிழ்நாட்டின் நலன்களைப் பாதுகாக்கும் எங்கள் அணிக்கும், மாநிலத்தை அழிப்பதற்குத் தயாராக இருக்கும் அவர்களின் அணிக்கும் இடையில்தான் இந்தப் போர் நடைபெறுகிறது. இந்தப் போரில் தமிழ்நாடு நிச்சயமாக வெற்றி பெறும்.

அ.தி.மு.க.வை பா.ஜ.க.விடம் "அடகு வைத்துவிட்டதாக"க் கூறி, நீங்கள் பழனிசாமியை விமர்சித்துள்ளீர்கள். இருப்பினும், கூட்டணியில் பா.ஜ.க.விற்கு மிகக் குறைந்த எண்ணிக்கையிலான தொகுதிகளை மட்டுமே ஒதுக்கி, அவர்களைக் கட்டுக்குள் வைத்திருப்பதாகவும்; பா.ஜ.க. விரும்பிய தொகுதிகள் அவர்களுக்கு ஒதுக்கப்படவில்லை என்றும் ஒரு கருத்து நிலவுகிறதே?

'ழிளிஜிகி' வாக்குகளைவிட அதிக வாக்குகளைப் பெறுவதற்கே திணறிக்கொண்டிருந்த ஒரு கட்சி (பா.ஜ.க.), இப்போது தேசிய ஜனநாயகக் கூட்டணியின் (NDA) ஒரு பகுதியாக 33 தொகுதிகளில் 27 தொகுதிகளில் நேரடியாகவும், 6 தொகுதிகளில் கூட்டணிக் கட்சிகள் தாமரைச் சின்னத்திலும் போட்டியிடுகிறது. தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றிலேயே இது முன்னெப்போதும் நிகழாத ஒரு நிகழ்வாகும். இதைத்தான் 'கட்டுக்குள் வைத்திருப்பது' என்று சொல்வார்களா? எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி மட்டுமே, தன்னை இந்தக் கூட்டணியின் தலைவர் என்றும், முதலமைச்சர் வேட்பாளர் என்றும் இதுவரை முழக்கமிட்டு வருகிறார். பழனிசாமி கூறுவதை அங்கீகரிக்காமல், இது ஒரு 'தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியாகவே அமையும் என்று பிரதமர் நரேந்திர மோடியும், உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் தொடர்ந்து கூறிக்கொண்டிருக் கவில்லையா? அந்த 'வீரமிக்க' பழனிசாமி, அவர்களை நேரடியாகக் கண்டித்தாரா? இல்லையே.றிஷீறீவீமீ வீநீவ

அதனால்தான், நாங்கள் மட்டுமல்லாமல் மக்களும்கூட அவரை பா.ஜ.க.வின் அடிமை என்று அழைக்கிறார்கள். அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் எத்தகைய தந்திரங்களை வகுத்தாலும் சரி, இந்தத் தேர்தலில் அவை எவையுமே எடுபடாது. தமிழ்நாட்டின் வரி வருவாயை மற்ற மாநிலங்களுக்காக மத்திய அரசு செலவிடுவதாக நீங்கள் குற்றம் சாட்டியுள்ளீர்கள். ஆனால், ஒப்பீட்டளவில் வளர்ந்த ஒரு மாநிலத்திற்கு, 'கூட்டுறவு கூட்டாட்சி' (Cooperative Federalism) தத்துவத்தின் ஒரு பகுதியாக, பின்தங்கிய மாநிலங்களின் வளர்ச்சிக்குத் துணை நிற்கும் பொறுப்பு உள்ளது...

நமது சகோதர மாநிலங்களின் இடர்பாடுகளைப் பகிர்ந்துகொள்வதிலோ அல்லது அவர்களுக்குத் துணை நிற்பதிலோ எவ்விதக் கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால், அவ்வாறு செய்வதற்காக வளர்ந்த மாநிலங்களைப் பட்டினி போடுவது நியாயம்தானா? சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களை ஊக்குவிப்பதே மிகச்சிறந்த கொள்கையாக அமையும். வளர்ந்த மாநிலங்களின் நல்லாட்சியை ஒரு குற்றத்தைப் போலக் கருதித் தண்டிப்பதையும்; மோசமான நிர்வாகத்தின் காரணமாகவே பின்தங்கிய நிலையில் நீடிக்கும் மாநிலங்களை, ஏதோ ஒரு நற்பண்பைப் பாராட்டுவது போலக் கருதி வெகுமதி அளிப்பதையும் தான் நாங்கள் கேள்விக்குள்ளாக்குகிறோம்.

தமிழ்நாட்டை வரம்பிற்கு மீறிச் சுரண்டிக்கொண்டே, தங்களுக்குச் சாதகமான மாநிலங்களுக்கு மட்டும் விகிதாச்சாரத்திற்கு மீறிய நிதியை ஒதுக்கும் போக்கிற்கு எதிராக, நிதிசார் தன்னாட்சிக்காக நாங்கள் எங்களது குரலை வலுவாக எழுப்பி வருகிறோம்.

தமிழ்நாடு வலிமையாகவும் தன்னிறைவு பெற்றதாகவும் இருந்தால்தான், அதனால் மற்றவர்களுக்குத் துணை நிற்க முடியும்; இல்லையா? பின்தங்கிய மாநிலங்களுக்காக, வளர்ந்த நிலையிலுள்ள தமிழ்நாட்டிடமிருந்து நிதியைக் கோருவதற்குப் பதிலாக, தமிழ்நாடு எவ்வாறு வளர்ச்சி அடைந்தது என்பதை மத்திய பாஜக அரசு ஆய்வு செய்ய வேண்டும்; மேலும், எங்களது கொள்கைகளை பாஜக ஆளும் மாநிலங்களிலும் நடைமுறைப்படுத்த முயல வேண்டும். 'நீட்' (ழிணிணிஜி) தேர்வு மற்றும் 'தேசியக் கல்விக் கொள்கை' (ழிணிறி) போன்ற, தோல்வியடைந்த தங்களது கொள்கைகளை அவர்கள் எங்கள் மீது திணிக்கக் கூடாது.

நமது மொழி உரிமைகள் எத்துணை முக்கியமோ, அதே அளவு நிதிசார் உரிமைகளும் முக்கியமானவை ஆகும். உண்மையான 'கூட்டுறவு கூட்டாட்சி' தத்துவத்தை உறுதி செய்வதற்காகவே, மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் வருவாய் பங்கை 50 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்.

2024 25 நிதியாண்டில், தமிழ்நாடு 11.19% என்ற உண்மையான மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி (நிஷிஞிறி) வளர்ச்சியை எட்டியுள்ளது; இது நாட்டிலேயே மிக உயர்ந்த வளர்ச்சியாகும். மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால், உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு (கிமி) காரணமாக வேலைவாய்ப்புச் சந்தையில் ஏற்படக்கூடிய இடையூறுகளைக் கருத்தில் கொண்டு, இத்தகைய வளர்ச்சி நிலைகளை நீங்கள் எவ்வாறு தக்கவைத்துக்கொள்வீர்கள்?

14 ஆண்டுகளுக்குப் பிறகு, யாரும் எதிர்பார்க்காத வகையில் 11.19% என்ற இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை நாங்கள் எட்டியுள்ளோம். 2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டை ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றும் இலக்கை நாங்கள் நிர்ணயித்துள்ளோம். இதை நாங்கள் நிச்சயமாக அடைவோம். அதேபோல், செயற்கை நுண்ணறிவுத் துறையை எதிர்கொள்ளும் திறன்பெறும் வகையில் எங்கள் இளைஞர்களின் திறன்களை நாங்கள் மேம்படுத்துவோம். இது ஒரு தடையல்ல; மாறாக, வளர்ச்சிக்கு உதவும் ஒரு படிக்கல்லாகும்.

மாநிலத்தின் சுயாட்சி உரிமையில் நீங்கள் எவ்வளவு உறுதியாக இருக்கிறீர்களோ, அதே அளவு உறுதியாக பாஜகவும் தனது சித்தாந்தத்தில் இருப்பதாகத் தெரிகிறது. இதன் விளைவாக, தமிழ்நாட்டிற்குத் தேவையான நிதிகள் தொடர்ந்து கிடைக்காமலும், பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்கள் நியமிக்கப்படாமலும் இருக்கும் நிலை நீடிக்கிறது. இதற்கு என்னதான் தீர்வு?

நாங்கள் எங்கள் நியாயமான உரிமைகளுக்காகப் போராடி வருகிறோம். அவர்களோ அடக்குமுறையின் மூலம் எங்களை அடிபணியச் செய்ய முயற்சிக்கிறார்கள். எந்த வகையான அடக்குமுறைக்கும் தமிழ்நாடு ஒருபோதும் அடிபணியாது. பாசிச சக்திகளைத் தோற்கடிப்பதற்காக நாங்கள் முன்னெடுக்கும் சட்டப் போராட்டங்களும், மக்கள் மன்றத்தில் நாங்கள் நடத்தும் போராட்டங்களும் தொடர்ந்து நடைபெறும். தமிழ்நாடு நிச்சயம் வெற்றி பெறும்.

# ஈரோடு மேற்கு தொகுதியில் அமைச்சர் முத்துசாமி தீவிர வாக்கு சேகரிப்பு..

## ஆரத்தி எடுத்து பெண்கள் வரவேற்பு..



ஈரோடு. ஏப்ரல். 011

ஈரோடு மேற்கு தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் அமைச்சர் சு. முத்துசாமி தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார் அவருக்கு பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்கின்றனர்.

வருகின்ற 23ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு பொதுத்தேர்தல் நடைபெற. தொடர்ந்து மே 04 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது.

இதனைத்தொடர்ந்து தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் தங்களின் வேட்பாளர்களை அறிவித்து தேர்தல் களத்தில் தீவிரமாக தேர்தல் பிரச்சார பயணத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனைத்தொடர்ந்து ஈரோடு மாவட்டத்தில் உள்ள எட்டு சட்டமன்றத் தொகுதிகளிலும் தேர்தல் சூடு பிடித்துள்ளது.

மேலும் ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் அமைச்சர் சு. முத்துசாமி திமுக மட்டும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் புடைசூழ தொகுதியில் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த நிலையில் கொல்லம்பாளையம் வார்டு எண் 55 ல் அவர் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது அவருக்கு அங்கிருந்த பெண்கள் ஆரத்தி எடுத்து சிறப்பான வரவேற்பு வழங்கினர்.

அவர்கள் மத்தியில் பேசிய திமுக வேட்பாளர் அமைச்சர் சு. முத்துசாமி தனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து ஆதரவு வழங்கவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்த பிரச்சார நிகழ்ச்சியில் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் திரளாக கலந்து கொண்டனர்.



2026 தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி சட்டமன்ற தொகுதிக்குட்ட பகுதி இலால்குடி புதிய பேருந்து நிலையத்தில் சமூக நலத்துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டப் பணியாளர்களைக் கொண்டு 100 % வாக்களிப்பீர் என்ற வடிவத்தில் நின்று வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்று, ரங்கோலி கோலமிட்டும், புதிய பேருந்து நிலையம் முதல் வட்டாட்சியர் அலுவலகம் வரை விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தி விழிப்புணர்வு பேரணி நடத்தினர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்டஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாவட்டம், கொங்கு பொறியியல் கல்லூரியில் மாவட்ட விளையாட்டுத் துறையின் சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் 100 % வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் கபாடி விளையாட்டுப் போட்டியினை துவக்கி வைத்தார்.

# நான் முதல்வராக்குன எடப்பாடி கிட்ட இருந்து என்னை காப்பாத்திக்க வேண்டிய நிலைமை: சசிகலா வேதனை

சிவகங்கை: ஏப்.11–

நான் முதலமைச்சரா வைத்து விட்டு போன எடப்பாடியிடம் இருந்து என் உயிரை காப்பாத்திக்க வேண்டி நிலை ஏற்பட்ட தாக பிரசாரத்தில் சசிகலா பேசினார். சிவகங்கை, அரண்மனை வாசல் முன்பு, அஇபுதமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் முருகானந்தத்தை ஆதரித்து அக்கட்சி தலைவர் சசிகலா பேசியதாவது: என்னை சில பேரு சொல்லும் போது வி.கே.எஸ் என்பார்கள். விக்கு வேலு நாச்சியார்ங்குறாங்க. கேக்கு குயிலிங்கறாங்க. எஸ்க்கு சசிகலான்னு சொல்வாங்க.

அது எனக்குப் பெருமையா இருக்கும். நம்ம கட்சியில நடந்த பிரச்னைகள் எல்லாம் உங்களுக்கு தெரியும். நான் சிறைக்கு போனதுல இருந்து உங்களுக்கு எல்லா விஷயமும் தெரியும். நான் அங்கே இருந்து மீண்டு வந்ததே பெரும்பாடு. நான் யாரை முதலமைச்சரா வைத்து விட்டு போனேனோ, அவர்கிட்ட இருந்து உயிரை காப்பாத்திக்க வேண்டிய ஒரு நிலைமை எனக்கு ஏற்பட்டது. அப்பவெல்லாம் வேலுநாச்சியாரை நினைச்சுக்குவேன். தமிழ்நாட்டு மக்களைத்தான் நான் முழுசா நம்புறேன். இவ்வாறு அவர் பேசினார்.




# திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளில் இறுதியாக 160 வேட்பாளர்கள் போட்டி :

## மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் ஏப் 11 :

தமிழகம் முழுவதும் சட்டப்பேரவை தேர்தல் வரும் 23 ஆம் தேதி நடைபெற உள்ளது. இதையொட்டி, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமனற தொகுதிகளிலும் கடந்த 30 ம் தேதி தொடங்கி, ஏப். 6 வரை நடைபெற்றது. இதையடுத்து 7 ஆம் தேதி பரிசீலனையில் 338 பேர் வேட்புமனு தாக்கல் செய்த நிலையில், அதில் 172 வேட்பு மனுக்கள் மட்டும் ஏற்கப்பட்டன.

இதில் முறையான விவரங்கள் அளிக்காத 166 வேட்பு மனுக்கள் வரையில் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த நிலையில், வேட்பு மனுக்களை 12 மனுக்கள் வரை திரும்பப் பெறப்பட்டன. அதைத் தொடர்ந்து, 160 பேர் கொண்ட இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டன.

அந்த வகையில், கும்மிடிப்பூண்டி 15, பொன்னேரி (தனி) 13, திருத்தணி 13, திருவள்ளூர் 14, பூந்தமல்லி (தனி) 11, ஆவடி 20, மதுரவாயல் 21, அம்பத்தூர் 23, மாதவரம் 15, திருவொற்றியூர் 15 என மொத்தம் 160 பேர் இறுதியாக போட்டியில் உள்ளனர்.

இதில், அம்பத்தூர், மதுரவாயல், ஆவடி ஆகிய தொகுதிகளில் 20 முதல் 23 வேட்பாளர்களும், மற்ற 7 தொகுதிகளில் 13 முதல் 15 பேர் வரை போட்டியில் உள்ளனர். இந்த நிலையில், ஒரு வாக்குப்பதிவு இயந்திரத்தில் 15 வேட்பாளர்கள், நோட்டாவுக்கும் சேர்த்து 16 சின்னங்கள் மட்டுமே பொருத்த முடியும். ஆனால், 16 க்கும் மேற்பட்டோர் போட்டியிட்டால் 2 வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்கள் பேர் மற்றும் சின்னங்கள் பொருத்தப்பட உள்ளதாக திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

# சேலம் மாவட்டம் 11 சட்டமன்ற தொகுதிகளில் 193 பேர் போட்டி.

சேலம். ஏப்.11–

சேலம் மாவட்டத்தில் உள்ள 11 சட்டப் பேரவைத் தொகுதிகளிலும் 193 பேர் போட்டியிடுகின்றனர்.

பேரவை தேர்தலுக்கான வாக்குப் பதிவு ஏப்ரல் 23 ஆம் தேதி நடைபெறுகிறது.

இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 30 ஆம் தேதி தொடங்கியது. வேட்புமனு தாக்கலுக்கு கடைசி நாளான கடந்த திங்கள்கிழமை வரை 11 தொகுதிகளில் 283 ஆண்கள், 72 பெண்கள் என மொத்தம் 355 பேர் மனு தாக்கல் செய்திருந்தனர். இதில் 277 மனுக்கள் பரிசீலனைக்கு ஏற்கப்பட்டன.

தொடர்ந்து வேட்புமனுக்கள் மீதான பரிசீலனையில் மொத்தம் உள்ள 277 மனுக்களில் 56 மனுக்கள் நிராகரிக்கப்பட்டு, 221 பேரின் மனுக்கள் ஏற்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. வேட்புமனுக்களை திரும்பப்பெற கடைசி நாளான வியாழக்கிழமை 3 மணி வரை 30 மனுக்கள் திரும்பப் பெறப்பட்டன. இதையடுத்து 11 தொகுதிகளிலும் 193 பேர் அதிகாரப்பூர்வமாக போட்டியிடுகின்றனர். இதில் அதிகபட்சமாக சேலம் மேற்கு தொகுதியில் 31 பேர் போட்டியிடுகின்றனர். குறைந்தபட்சமாக கெங்கவல்லி, ஏற்காடு தொகுதியில் தலா 13 பேர் போட்டியிடுகின்றனர்.

தொகுதி வாரியாக வேட்பாளர்கள் விவரம்: கெங்கவல்லி 13 வேட்பாளர்கள், ஆத்தூர் 15 வேட்பாளர்கள், ஏற்காடு 13 பேர், ஓமலூர்15 பேர், மேட்டூர் 18 பேர், எடப்பாடி 15 பேர், சங்ககிரி 20 பேர், சேலம் மேற்கு 31, சேலம் வடக்கு14, சேலம் தெற்கு19, வீரபாண்டி 20 பேர் என மொத்தம் 193 பேர் போட்டியிடுகின்றனர். சுயேச்சைகளுக்கான சின்னங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

# இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேர் விடுதலை!!

ராமநாதபுரம்: ஏப்.11–

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேர் விடுதலை செய்யப்பட்டனர். பிப்ரவரி 19ம் தேதி எல்லை தாண்டி மீன்பிடித்ததாக 12 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்தது. 8 மீனவர்களை விடுவித்த ஊர்காவல்துறை நீதிமன்றம் 2 பேருக்கு அபராதம், இருவருக்கு 3 மாதம் சிறை தண்டனை விதித்தது.

# சேலத்தில் மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த அரசு பள்ளி ஆசிரியர் கைது.

சேலம் மாவட்டம் சங்ககிரி அருகே அரசுப் பள்ளியில் மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு அளித்ததாக ஆசிரியர் கைது செய்யப்பட்டார்.



சேலம் மாவட்டம்,சங்ககிரி ஊராட்சி ஒன்றியத்திற்கு உள்பட்ட அரசு நடுநிலைப் பள்ளி ஆசிரியர் பாலசுப்ரமணியம்(49)பாலியல் தொந்தரவு செய்வதாக அப்பள்ளி தலைமையாசிரியையிடம் மாணவிகள் புகார் தெரிவித்தனர்.

இதுகுறித்து தலைமையாசிரியை கல்வித் துறை உயரதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார். இதையடுத்து சங்ககிரி வட்டாரக் கல்வி அலுவலர் எம்.எஸ்.மாலதி பள்ளிக்குச் சென்று 17 மாணவிகளிடம் விசாரணை நடத்தினார். பின்னர்,சங்ககிரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமையாசிரியை அளித்த புகாரின்பேரில் போலீஸார் போக்ஸோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து பாலசுப்ரமணியத்தை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.போலீஸார் விசாரணையில் ஆசிரியர் மீது சேலம், சூரமங்கலம் காவல் நிலையத்தில் ஏற்கெனவே போக்ஸோ வழக்கு பதிவாகியுள்ளது தெரியவந்துள்ளது.

# மணப்பாறை சட்டமன்றத் தொகுதியை முன்மாதிரி தொகுதியாக மாற்றிக் காட்டுவேன்

## தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் ஆர் கதிரவன் தேர்தல் பரப்புரை



திருச்சி. ஏப்.11–

திருச்சி மாவட்டம் மணப்பாறை சட்டமன்ற தொகுதி தமிழக வெற்றி கழக வேட்பாளர் ஆர் கதிரவன் தொடர்ந்து மருங்காபுரி துவரங்குறிச்சி மணப்பாறை வையம்பட்டி ஒன்றியங்களில் தீவிர தேர்தல் பரப்புரை மேற்கொண்டார்

நேற்று காலை தனது சொந்த ஊரான வையம்பட்டி ஒன்றியம் பொன்னம்பலம் பட்டியில் தனது தேர்தல் பிரச்சாரத்தை துவங்கி பல்வேறு கிராமங்களில் வாக்காளர்களை சந்தித்து தமிழக வெற்றிக் கழக சின்னமான விசில் சின்னத்திற்கு தீவிர தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்

பிரச்சாரத்தின் போது வாக்காளர்கள் மத்தியில் தமிழக வெற்றிக்கழக வேட்பாளர் ஆர் கதிரவன் பேசியதாவது:

மணப்பாறை சட்டமன்ற தொகுதி என்பது மிகப்பெரிய சட்டசபை தொகுதி ஆகும் இந்த தொகுதியில் ஏற்கனவே ஆண்ட கட்சியும் தற்போது ஆண்டு கொண்டிருக்கும் கட்சியும் மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர் சுகாதாரம் சாலை வசதி மருத்துவ வசதிகள் எதுவும் இது வரை இவர்கள் எதையும் செய்துகொடுக்கவில்லை தொடர்ந்து தொகுதி முழுவதும் நான் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது ஒவ்வொரு ஊர்களிலும் உள்ள இளைஞர்களுக்கு இதுவரை எந்தவித வேலை வாய்ப்பையும் ஏற்படுத்தி தரவில்லை என்ற குற்றச்சாட்டை பொதுமக்கள் மத்தியில் காண முடிந்தது அப்படிப்பட்ட சூழலில் தற்போது தமிழகத்தில் மாற்றம் தேவை என்ற அடிப்படையில் தலைவர் விஜய் அவர்கள் தனக்கான வருமானத்தை எல்லாம் விட்டுவிட்டு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் மக்களால் தான் வளர்ந்தோம் அதே மக்களுக்காக நாம் ஏதாவது செய்தாக வேண்டும் என்ற நோக்கில் மாற்றம் தேவை என்ற அடிப்படையில் தமிழக வெற்றி கழகம் என்ற ஒரு கழகத்தை உருவாக்கி மக்கள் பணியாற்ற வந்துள்ளார்

நான் விஜயின் தம்பி உங்களுக்காக எந்த நேரமும் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருவேன் நமது மணப்பாறை சட்டமன்ற தொகுதியில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்துவேன் பல்வேறு கிராமங்களில் ஏற்கனவே கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் அனைத்தும் முற்றிலும் சிதலமடைந்து கிடக்கும் நிலையை காண முடிந்தது அவர்களுக்கு நிச்சயம் நல்ல வீடு கட்டித் தர நான் பாடுபடுவேன் மேலும் பல்வேறு கிராமங்களுக்கு கிடைக்க வேண்டிய மக்கள் நலத்திட்டங்களை கொண்டு வந்து சேர்க்கவும் ஒரு இளைஞனாக மணப்பாறை மண்ணின் மைந்தராக உங்கள் வீட்டுப் பிள்ளையாக நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வர இந்த இளைஞனுக்கு ஒருமுறை வாய்ப்பு தாருங்கள் .மணப்பாறை தொகுதியை முன்மாதிரியான தொகுதியாக மாற்றிக் காட்டுகிறேன் என்று வாக்காளர்கள் மத்தியில் பேசினார்



விவசாயத் தோட்டத்தில் கடலை பறித்துக் கொண்டிருந்த பெண்களோடு அமர்ந்து தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் ஆர் கதிரவன் கடலை பறித்து கொடுத்து விசில் சின்னத்திற்கு வாக்கு கேட்டார்

## கிருஷ்ணகிரியில் வரலாற்றுச் சாதனை:

# 2000 பேர் ஒரே நேரத்தில் எழுதி கின்னஸ் உலக சாதனை முயற்சி வெற்றி

கிருஷ்ணகிரி ,ஏப்ரல் 11

தேர்தல் விழிப்புணர்வை வலியுறுத்தி, ஜெசிஜ கிருஷ்ணகிரி, உமாராணி மல்டிஸ்பெஷாலிட்டி மருத்துவமனை மற்றும் அரசு மகளிர் கலை கல்லூரி ஆகியவை இணைந்து இன்று ஒரு பிரம்மாண்ட கின்னஸ் உலக சாதனை முயற்சியை மேற்கொண்டன.

சாதனை விபரம்: இந்த நிகழ்வில் 2000 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு, சரியாக 6 வினாடிகளில் “என் வாக்கு, என் உரிமை” என்ற வாசகத்தை ஒரே நேரத்தில் எழுதி உலக சாதனை படைத்தனர். 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி இந்த விழிப்புணர்வு வாசகம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

முன்னிலை வகித்தவர்கள்: மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தலைமைத் தேர்தல் அதிகாரி உயர்திரு. ச. தினேஷ் குமார், அவர்கள் தலைமைவிருந்தினராகக் கலந்துகொண்டு சாதனை முயற்சியைத் தொடங்கி வைத்தார். டி ஆர் டி ஏ இணை இயக்குநர் உயர் திருமதி. K. கவிதா கௌரவ விருந்தினராகப் பங்கேற்றார்.

தலைமை: இந்தச் சாதனை விழாவிற்கு ஜேசிஐ கிருஷ்ணகிரி தலைவர் ஜெ எப் பி கோகுல் சின்னசாமி, கல்லூரி முதல்வர் முனைவர் S. கீதா, மற்றும் உமாராணி மருத்துவமனை நிர்வாக இயக்குநர் டாக்டர் பி கெ சிவகுமார் ஆகியோர் தலைமை வகித்தனர்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் ஜெ சி எஸ் முபீஸ் பாஷா மற்றும் கந்தன் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஆகியோரின் சிறப்பான ஏற்பாட்டில், தேர்தல் விழிப்புணர்வு குறித்த இந்த வரலாற்று நிகழ்வு கிருஷ்ணகிரி மண்ணில் பெரும் முத்திரையைப் பதித்துள்ளது.

## வையம்பட்டியில் ரூபாய் 9.35கோடியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்து இளைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய எனக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு தாருங்கள்

### திமுக கூட்டணி கட்சி வேட்பாளர் ப அப்துல் சமத் தேர்தல் பரப்புரை





திருச்சி. ஏப்.11–

திருச்சி மாவட்டம் மணப்பாறை சட்டமன்ற தொகுதி திமுக கூட்டணி வேட்பாளர் பா அப்துல் சமத் வையம்பட்டி ஒன்றியத்தில் நேற்று காலை கல் கொத்தனூர் மூரம்பட்டி அனுக் கானதம் குரும்பப்பட்டி புறத்தாக்குடி பழைய கோட்டை தேரப்புப் பட்டி ஒந்தம்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் தேர்தல் பரப்புரையயில் ஈடுபட்டார்.

அப்போது அவர் பேசியதாவது:

நான் கடந்த ஐந்து ஆண்டுகளில் சட்ட மன்றத்தில் 42 முறை மணப்பாறை மக்களுக் காக மணப்பாறையின் அடிப்படைத் தேவைகளுக்காக குரல் கொடுத்து மணப்பாறை சட்டமன்ற தொகுதி முழுவதும் என்னால் முடிந்த வரை மக்கள் நலத்திட்ட பணிகளை மக்களுக்கு பெற்றுத் தந்து மணப்பாறையில் அரசு கலைக்கல்லூரியும் வையம்பட்டியில் ரூபாய் 9 35 கோடியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்து இளைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி உள்ளேன்

மேலும் மணப்பாறையின் தாகம் தீர்த்த சாதனையாக 30 ஆண்டுகால குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண ரூபாய் 800 கோடி மதிப்பீட்டில் காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தை வேகம் எடுக்கச் செய்த மகத்தான பணியையும் செய்துள்ளேன் எனவே மீண்டும் மணப்பாறை சட்டமன்ற தொகுதியில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளராக மீண்டும் மணப்பாறை சட்டமன்ற தொகுதி திமுக கூட்டணியில் மனித நேய மக்கள் கட்சி சார்பில் வேட்பாளராக போட்டியிடுகிறேன் எனக்கு நீங்கள் அனை வரும் உதயசூரியன் சின்னத்தில் வாய்ப்பு அளித்து வாக்களித்து மிகப்பெரிய வெற்றியை தேடித் தர வேண்டும் என்றும் இன்னும் பல சாதனைகளை மணப்பாறைக்கு செய்ய மீண்டும் ஒரு வாய்ப்பை தரும்படி பேசினார்

## திருவள்ளூர் மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்



திருவள்ளூர் ஏப் 11 :

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஜே.என் சாலை உழவர் சந்தை அருகில் "தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா" சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026யை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி திருவாரூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் நகராட்சி நிர்வாகத்துறை இணைந்து அமைத்த திருவள்ளூர் மாவட்ட தேர்தல் விழிப்புணர்வு சின்னத்தின் உருவச்சிலையை (மாஸ்காட்) மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு. பிரதாப் திறந்து வைத்து பொதுமக்களிடம் தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் 100க்கும் மேற்பட்ட நகராட்சி பணியாளர்கள் தேர்தல் விழிப்புணர்வு பதாகைகள் மற்றும் கொடிகளை ஏந்தி 100 சதவிகித வாக்குப்பதிவை அளிக்க வேண்டுமென பொதுமக்களிடையே வலியுறுத்தினர். அதனைத்தொடர்ந்து, பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காக்களூர் ஆவின் பால்பண்னை வளாகத்திலுள்ள விற்பனையகத்தில் தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா" சட்டமன்ற பொது தேர்தல்2026யை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி திருவாரூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் ஆவின் பால் உற்பத்தி நிறுவனம் இணைந்து, மாவட்ட தேர்தல் அலுவலர் தலைமையில் ஆவின் பொருட்களில் தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்த திருவள்ளூர் மாவட்ட தேர்தல் விழிப்புணர்வு சின்னத்தினை (மாஸ்காட்) அச்சடித்து அதனை பொதுமக்களுக்கு விநியோகிக்கும் பணிகளை தொடங்கி வைத்தார்.

மேலும் திருவள்ளூர் மாவட்ட தேர்தல் விழிப்புணர்வு சின்னம் அச்சடிக்கப்பட்ட ஆவின் பொருட்களின் விற்பனையை தொடங்கும் விதமாக பொதுமக்களிடையே வழங்கினார். தொடர்ந்து ஆவின் பொருட்களை விநியோகிக்கும் வாகனங்களில் தேர்தல் விழிப்புணர்வு ஒட்டு வில்லைகளை ஒட்டி தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இந்நிகழ்ச்சியில் 200க்கும் மேற்பட்ட ஆவின் பால் நிறுவன அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும் இணை இயக்குநர் வை.ஜெயக்குமார், உதவி இயக்குநர் (பயிற்சி) பி.மோகன், திருவள்ளூர் நகராட்சி ஆணையர் தாமோதரன், சுகாதார அலுவலர் மோகன், திருவள்ளூர்காஞ்சிபுரம் ஆவின் பால் கூட்டுறவு சங்க பொது மேலாளர் சிவகுமார்,திருவள்ளூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ந.இளங்கோவன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில் 8 பேருக்கு மருத்துவ உதவி நிதி ரூ.2 லட்சம்:

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

சென்னை: ஏப்.11

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில் 8 பேருக்கு மருத்துவம் உதவி நிதியாக தலா ரூ.25 ஆயிரம் வீதம் ரூ.2 லட்சம் நிதியை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக கலைஞர் தந்த ரூ.5 கோடியில் கிடைக்கும் வட்டியில் மாதந்தோறும் ஏழை, எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகை 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது. ரூ.5 கோடியில் 1 கோடியை தென்னிந்திய புத்தக விற்பனையாளர் பதிப்பாளர் சங்கத்துக்கு 2007ல் கலைஞர் வழங்கினார்.

மீதமுள்ள ரூ.4 கோடியில் கிடைக்கும் வட்டியில் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரை ரூ.6 கோடியே 45 லட்சத்து 90 ஆயிரம் உதவி தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் 8 பேருக்கு தலா ரூ.25 ஆயிரம் வீதம் ரூ.2 லட்சத்தை மு.க.ஸ்டாலின் நேற்று வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களில் இருந்து வந்து போகும் செலவை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவு காசோலையாக அனுப்பப்படுகிறது.இந்த தகவலை திமுக தலைமை தெரிவித்துள்ளது.

## ஈரோடு மேற்கு தொகுதி தமிழ் மாநில காங்கிரஸ் வேட்பாளர் எம். யுவராஜ் தீவிர தேர்தல் பிரச்சாரம்.

### காசிபாளையம் பகுதியில் ஆரத்தி எடுத்து பெண்கள் வரவேற்பு..



ஈரோடு. ஏப்ரல். 11

ஈரோடு மேற்கு தொகுதி தமிழ் மாநில காங்கிரஸ் வேட்பாளர் பி. யுவராஜ் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

வருகின்றன ஏப்ரல் 23ஆம் தேதி தமிழகத்தில் தேர்தல் நடைபெற உள்ளது. அடுத்த மாதம் மே நாலாம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

தேசிய முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் பி. யுவராஜ் ஈரோடு மேற்கு தொகுதியில் போட்டியிடுகிறார்.

அவர் நேத்து தொகுதியில் உள்ள பல்வேறு இடங்களில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். தொடர்ந்து அவர் நாடார் மேடு கொல்லம்பாளையம் அண்ணமார் பெட்ரோல் பங்க் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது அவருக்கு அங்கிருந்த பெண்கள் ஆரத்தி எடுத்து தங்களின் ஆதரவை தெரிவித்தனர்.

இந்த தேர்தல் பிரச்சார நிகழ்ச்சியில் அதிமுக, பாஜக, தமிழ் மாநில காங்கிரஸ், பாமக உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டு தாமரை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தனர்.

## "பழனிசாமிக்கு பாடம் புகட்டவே தேர்தலில் போட்டி"

### கிருஷ்ணசாமி ஆவேசம்



திருநெல்வேலி: ஏப்.11–

"அதிமுக பொதுச் செயலர் பழனிசாமிக்கு பாடம் புகட்ட வேண்டும் என்ற நோக்கிலேயே இந்த தேர்தலில் புதிய தமிழகம் கட்சி போட்டியிடுகிறது" என்று அக்கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

சட்டப்பேரவை தேர்தலில் புதிய தமிழகம் கட்சி சார்பில் போட்டியிடும் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி, அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சின்னத்தை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சி திருநெல்வேலியில் நடைபெற்றது.

இதில் பங்கேற்ற புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி கூறியது: "தமிழக சட்டப் பேரவை தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் அறிவிப்பின்படி, புதிய தமிழகம் கட்சி சார்பில் போட்டியிடும் 61 வேட்பாளர்களில் 57 பேருக்கு சிலிண்டர் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடையநல்லூர், கீழ்வேளூர் உள்ளிட்ட 4 தொகுதிகளில் வாளி சின்னம் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் 90 லட்சம் பேர் தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர்கள் உள்ளனர். அவர்கள் ஆதரவோடு புதிய தமிழகம் கட்சி களம் காண்கிறது. எந்த தேர்தலையும் புறக்கணிக்காமல், புதிய தமிழகம் கட்சி தொடர்ந்து களம் கண்டு வருகிறது. தனித்து போட்டியிடுவது புதிய தமிழகம் கட்சிக்கு புதிது அல்ல.

இன்றைய அரசியலில், கட்சிகள் கூட்டணி அமைத்து போட்டியிடுவது ஒரு கலாச்சாரமாக மாறிவிட்டது. கடந்த 2024ம் ஆண்டு தேர்தலில் பாஜக கூட்டணியிலிருந்து வெளியேறி திமுக வெற்றிக்கு பழனிசாமி வழிவகுத்தார். இந்த தேர்தலில் எங்களோடு 2 முறை பேச்சுவார்த்தை நடத்தி எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடுவீர்கள் என எழுதி வாங்கிய பின்னரும், எங்களது கூட்டணி பேச்சுவார்த்தை முடிந்துவிட்டதாக பழனிசாமி அறிவித்து விட்டார். அவருக்கு பாடம் புகட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் புதிய தமிழகம் கட்சி தனித்து போட்டியிடுகிறது.

புதிய தமிழகம் கட்சி போட்டியிடாத தொகுதிகளில் திமுக, அதிமுகவுக்கு எங்களது ஆதரவு கிடையாது. அந்த தொகுதிகளில் தேவேந்திர குல வேளாளர் சமூகத்தினரும் வாக்களிக்க மாட்டார்கள். இந்த தேர்தலை, பட்டியல் வெளியேற்றத்திற்கான வாக்கெடுப்பாக கருதி சந்திக்கிறோம். புதிய தமிழகம் கட்சி போட்டியிடும் இடங்களில் எங்களுக்கு அதிக ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது .

புதிய தமிழகம் கட்சி தனது சொந்த பலத்துடன், தனித்துவத்தையும் சுயமரியாதையையும் காக்கும் நோக்கில் போட்டியிடுகிறது. கூட்டணியில் உள்ள பிற கட்சிகள் வளர கூடாது என்ற நோக்கில் அதிமுக செயல்படுகிறது" என்று தெரிவித்தார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவோடு கூட்டணி பேச்சு வார்த்தை நடத்திய தங்களுக்கு இப்போதுள்ள அதிமுகவுடனான பேச்சுவார்த்தை எப்படி தோன்றுகிறது என்ற கேள்விக்கு பதில் அளித்த அவர், "ஜெயலலிதாவையும் பழனிசாமியையும் ஒப்பிட்டு பார்க்க முடியாது. அவர்களுக்கு இடையே உள்ள வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்" என தெரிவித்தார்.

புதிய தமிழகம் கட்சி போட்டியிடுவதால் வாக்குகள் பிரிந்து திமுகக்கு சாதகமாக அமையுமா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு, "நாங்கள் யார் வாக்கையும் பிரிக்க வில்லை. தேவேந்திரகுல வேளாளர்களின் வாக்குகளை ஒற்றுமையாக்குகிறோம்" என தெரிவித்தார்.

## தந்தை ரயிலில் அடிப்பட்டு உயிரிழந்ததால் வாரிசு அடிப்படையில் கிடைத்த வேலைக்கு சென்றபோது மகனும் ரயிலில் அடிப்பட்டு உயிரிழப்பு!!

சென்னை: ஏப்.11–

ரயில்வேயில் வேலை செய்த தந்தை ரயிலில் அடிப்பட்டு உயிரிழந்ததால் வாரிசு அடிப்படையில் கிடைத்த வேலைக்கு சென்றபோது தண்டவாளத்தை கடக்கமுயன்ற மகனும் ரயிலில் அடிப்பட்டு சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். சென்னை திலகர் நகரை சேர்ந்த வேணுகோபால் கடந்த 2023ல் உயிரிழந்த நிலையில், கடந்த ஆண்டு நவ. 11ம் தேதி அவரது மகன் கிஷோர் குமாருக்கு வேலை கிடைத்தது. திருவொற்றியூர் ரயில் நிலையத்தில் நேற்று வேலைக்கு செல்லும்போது கவனக்குறைவாக தண்டவாளத்தை கடந்தபோது இந்த துயர சம்பவம் ஏற்பட்டுள்ளது.

## திருவள்ளூர் அருகே கண் பார்வையற்ற இளம் பெண்ணின் இரண்டு வயது பெண் குழந்தை தண்ணீர் தொட்டியில் தவறி விழுந்து உயிரிழந்த பரிதாபம்

திருவள்ளூர் ஏப் 11 :

திருவள்ளூர் அடுத்த கைவண்டூர் ஊராட்சிக்கு உட்பட்ட தொழுதவாக்கம் கிராமத்தை சேர்ந்தவர் சுமதி. இவருக்கும் ஆந்திர மாநிலம் வரதபாளையம் பகுதியைச் சேர்ந்த சதிஷ் என்பவருக்கும் திருமணமான நிலையில் கண் பார்வை குறைபாடு உள்ளதை மறைத்ததன் காரணமாக ஆறு மாத கர்ப்பிணியாக இருக்கும் போது கணவர் சதீஷ் பிரிந்து சென்றதாக கூறப்படுகிறது.



இந்நிலையில் இவருக்கு இரண்டு வயதில் யக்ஷிதா என்ற இரண்டு வயது உள்ள பெண் குழந்தையை வளர்த்து வந்துள்ளார். இந்நிலையில் தாய் சுமதி வீட்டுக்குள் இருக்க குழந்தை ரக்ஷிதா வீட்டின் பின்புறம் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு இருந்த தண்ணீர் தொட்டியில் இருந்து தண்ணீரை எடுத்து கீழே ஊற்றி விளையாடிக் கொண்டிருந்த நிலையில் குழந்தை தொட்டியில் தவறி விழுந்து அலறியுள்ளது. தாய்க்கு கண் தெரியாத காரணத்தால் கூச்சலிடவே அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் விரைந்து வந்து பார்த்தபோது தண்ணீர் தொட்டியில் குழந்தை இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்து குழந்தையை மீட்டு திருவள்ளூர் மாவட்ட அரசு கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே குழந்தை இறந்து விட்டதாக தெரிவித்துள்ளனர். இதையடுத்து திருவள்ளூர் தாலுகா போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பறக்கும் படைகளால் ரொக்கம், பொருட்கள் பறிமுதல்: உரிய ஆவணங்கள் காண்பித்ததால் ரூ.1.66 கோடி திரும்ப ஒப்படைப்பு

சென்னை: ஏப்.11–

சென்னை மாவட்டத்தில் பறக்கும் படைகளால் பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் பொருட்களில் உரிய ஆவணங்கள் காண்பித்ததால், ரூ.1.66 கோடி உரியவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, சென்னை மாநகராட்சி நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலை முன்னிட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டு நடைமுறை மற்றும் தேர்தல் நடத்தை விதிமுறைகளின்படி, முறையான ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்படும் ரூ.10 ஆயிரத்துக்கு மேல் மதிப்புள்ள பொருட்கள் மற்றும் ரூ.50 ஆயிரத்துக்கும் மேல் ரொக்கமாக கொண்டு செல்லப்படும் பணம் பறிமுதல் செய்யப்பட்டு அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்படுகின்றன.

பின்பு, விசாரணையில் முறையான ஆவணங்களை மேல்முறையீட்டு குழுவிடம் தாக்கல் செய்யும் பட்சத்தில் மீண்டும் உரிய நபரிடம் ஒப்படைக்கப்படுகிறது. அந்த வகையில், சென்னை மாவட்டத்தில் ஆவணங்கள் இன்றி பறிமுதல் செய்யப்படும் பொருட்கள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றை விடுவிப்பதற்கு மேல்முறையீட்டு அலுவலர்கள் அடங்கிய குழு உதவி ஆணையர் தலைமையில், சென்னை மாநகராட்சியில் (தொடர்பு எண் 94451 90300)) அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் பறிமுதல் செய்யப்படும் பொருட்கள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றை விடுவிக்க மேல்முறையீடு செய்பவர்கள் மனுவினை உரிய ஆவணங்களுடன் சமர்ப்பித்து, விடுவிப்பு ஆணையினைப் பெற்று, அரசு கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ள பொருட்கள் அல்லது ரொக்கத்தினை பறக்கும் படை அலுவலர் மூலமாக விடுவிப்பு ஆணையினை கருவூலத்தில் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

சென்னை மாவட்டத்தில் பறக்கும் படைகள் மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுக்கள் மூலம் உரிய ஆவணங்களின்றி பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் ரொக்கத்தை விடுவிக்கக் கோரி இதுவரை 113 மேல்முறையீடுகள் பெறப்பட்டன.

கடந்த 8ம் தேதி வரை உரிய ஆவணங்கள் சமர்ப்பித்த 98 மேல்முறையீடுகளில் ரூ.1,66,75,283 விடுவிக்கப்பட்டுள்ளது. 15 மேல்முறையீட்டு மனுக்கள் பரிசீலனையில் உள்ளன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பழவேற்காடு மீன் சந்தை அருகில் சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி மீனவ படகுகளில் கடலுக்குள் சென்று மூவர்ண பலூன்களை பறக்கவிட்டு தேர்தல் விழிப்புணர்வு



திருவள்ளூர் ஏப் 11 : திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம் மற்றும் பொன்னேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பழவேற்காடு மீன் சந்தை அருகில் "தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா" சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026யை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலுயுறுத்தும் விதமாக திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் மீன்வளத்துறை இணைந்து மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு. பிரதாப் 100க்கும் மேற்பட்ட மீனவ படகுகளில் கடலுக்குள் சென்று மூவர்ண பலூன்களை பறக்கவிட்டு, செய்தி மக்கள் தொடர்பு துறையின் அதிநவீன மின்னணு விளம்பர வாகனத்தில் திரையிடப்பட்ட தேர்தல் விழிப்புணர்வு குறும்படத்தை மீனவ பிரதிநிதிகள் மற்றும் மீனவ கல்லூரி மாணவ மாணவியர்களுடன் பார்வையிட்டு, பல்வேறு மீனவ கிராம நிர்வாகிகளுக்கு தேர்தல் விழிப்புணர்வு சால்வைகளை அணிவித்து பேசினார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் 100% வாக்களிப்பு என்ற ஒரு முக்கியமான இலக்கினை அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இன்று பொன்னேரி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பழவேற்காடு பகுதியில் மீனவர்களுக்கான பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் செய்தி மற்றும் விளம்பரத்துறை சார்பாக உள்ள வாகனத்தில் பல்வேறு விழிப்புணர்வு படங்கள், குறும்படங்கள் திரையிடப்பட்டு பொதுமக்களுக்கான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் இதுவரை ரொக்கமாக ரூ.12.95 கோடி, நகைகளாக தங்க கட்டிகள் தங்க பிஸ்கட் 45 கிலோ தங்க கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அது போக வெளிநாடு கரன்சிகள் ஸ்ரீலங்கன் கரன்சி கொஞ்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சில கட்சிகளோட கொடிகள், சில கட்சிகளோட பரிசு பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு அனைத்தும் மாவட்ட கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ரீவென்ஸ் கமிட்டி திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் உள்ள அந்த கமிட்டியில் ஆஜர் ஆகி ஆவணங்களை காண்பித்து அவர்களது நகைகளோ அல்லது ரொக்க பணத்தை திருப்ப பெற்றுக் கொள்ளலாம்.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளிலும் 260 வாக்குச்சாவடி மையங்கள் பதற்றமான வாக்குச்சாவடிகளாக கண்டறியப்பட்டுள்ளது. மாவட்டத்தில் மொத்தமுள்ள 4016 வாக்குச்சாவடிகளிலும் சிசிடிவி கேமரா பொறுத்ததற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. எனவே எவ்வித இடையூறும் இல்லாமல் இந்த தேர்தல் சிறப்பான தேர்தல் நடத்தப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர் கூறினார்.

இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும் இணை இயக்குநருமான வை.ஜெயக்குமார், செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) சு.தணிகாசலம், உதவி இயக்குநர் (ஊராட்சிகள் (ம) தணிக்கை (மத்தியம்)) யுவராஜ், உதவி இயக்குநர் (மீன்வளத்துறை) அஜய் ஆனந்த், உதவி ஆணையர் ராஜசேகரன், உதவி இயக்குநர் (பயிற்சி) பி.மோகன், மீஞ்சூர் வட்டார வளர்ச்சி அலுவலர் மணிசேகர் (கி.ஊ), 500க்கும் மேற்பட்ட மீனவ கிராம பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் சி.என்.ராமமூர்த்தி சந்திப்பு:

## திமுக கூட்டணிக்கு பரப்புரை செய்வோம் என்று அறிவிப்பு



சென்னை: ஏப்.11–

சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை சி.என்.ராமமூர்த்தி நேற்று நேரில் சந்தித்து, திமுக தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார். திமுக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள திமுக அலுவலகத்தில், வன்னியர் கூட்டமைப்பின் தலைவரும், அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சியின் நிறுவன தலைவருமான சி.என். ராமமூர்த்தியும்துணைத் தலைவர் கே.வெங்கடேசன், பொதுச்செயலாளர் ஜோசப்ராஜ் நேரில் சந்தித்து பேசினர்.

அப்போது நடைபெற இருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், அனைத்து தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சி நிர்வாகிகள் தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தார்.

அப்போது திமுக பொருளாளர் டி.ஆர்.பாலு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர். முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்த பின்னர் சி.என்.ராமமூர்த்தி அளித்த பேட்டியில், "ஏற்கனவே திமுகவுக்கு ஆதரவு தெரிவித்தோம். (நேற்று) முதல்வரை நேரில் சந்தித்து சட்டமன்ற தேர்தலுக்காக நேரில் ஆதரவு தெரிவித்தோம்.

திமுக அரசு பொருளாதார நடவடிக்கை, கல்வி என அனைத்திலும் சிறப்பாக நடவடிக்கை எடுத்துள்ளது. எனவே மீண்டும் திமுக ஆட்சி அமைய வேண்டும். அனைத்துதொகுதியிலும் திமுக கூட்டணிக்கு பரப்புரை செய்ய இருக்கிறோம். இடஒதுக்கீடு கேட்டு உயிர் நீத்தவர்களுக்கு திமுக அரசு பல உதவிகள் செய்தது. கலைஞர் பல திட்டங்களை செய்தார்" என்றார்.

# கடந்த 2025–26ல் முதல்வர் மருந்தகங்கள் மூலம் 90 ஆயிரம் பேர் பயன்

## திமுக அரசுக்கு திண்டுக்கல் மாவட்ட மக்கள் நன்றி தெரிவிப்பு

திண்டுக்கல்: ஏப்.11–

திண்டுக்கல் மாவட்டத்தில் 31 முதல்வர் மருந்தகங்கள் மூலம் கடந்த ஆண்டு மொத்த விற்பனை ரூ.63 லட்சம் ஆகும். இதில் ரூ.13.23 லட்சம் தள்ளுபடி வழங்கப்பட்டு, ரூ.50 லட்சம் மதிப்பிலான மருந்து, மாத்திரைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் 90 ஆயிரம் பேர் மருந்துகள் வாங்கி பயனடைந்துள்ளனர். குறைந்த விலை முதல்வர் மருந்தகங்களை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்ற மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டு மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 2025ம் ஆண்டு ஆக.15ம் தேதி ஜெனரிக் (பொது பெயர் வகை) மருந்துகளையும், பிற மருந்துகளையும் குறைந்த விலையில் பொது மக்களுக்கு கிடைக்க செய்யும் வகையில் முதல்கட்டமாக தமிழகத்தில் 1000 முதல்வர் மருந்தகங்கள் துவங்கப்படும் என அறிவித்தார்.

அந்த வகையில் உயிர் காக்கும் மருந்துகள், மிக பயனுள்ள மருந்துகள் மிக குறைந்த விலையில் பொதுமக்களுக்கு கிடைக்க செய்யும் வகையில் கூட்டுறவு துறை சார்பில் மாநிலம் முழுவதும் 1000 முதல்வர் மருந்தகங்கள் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் திறந்து வைக்கப்பட்டன. இதன்மூலம் தமிழ்நாடு முழுவதும் பொது மக்களுக்கு 20 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை தள்ளுபடி விலையில் தரமான மருந்துகள் மற்றும் மாத்திரைகள் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. முதல்வர் மருந்தகம் அமைக்கும் தொழில் முனைவோருக்கு ரூ.3 லட்சமும், கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.2 லட்சமும் அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மூலம் தனிநபர்கள் தொழில்முனைவோராக மாறுவதற்கு அரசின் நிதி உதவி பேருதவியாகவும், டி.பார்ம், பி.பார்ம் உள்ளிட்ட மருந்தாளுநர் படிப்பு முடித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையில் அமைந்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் 31 முதல்வர் மருந்தகங்கள் துவங்கிவைக்கப்பட்டன. இதில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக திண்டுக்கல் சரகத்தில் 12 மற்றும் பழநி சரகத்தில் 9 என 21 முதல்வர் மருந்தகங்கள், தனிநபர் தொழில்முனைவோர் மூலமாக 10 முதல்வர் மருந்தகங்கள் துவங்கப்பட்டுள்ளன. இந்த மருந்தகங்களுக்கு தேவையான மருந்துகள் திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மருந்து கிட்டங்கியிலிருந்து அனுப்பி வைக்கப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 31 முதல்வர் மருந்தகங்கள் மூலம் கடந்த ஆண்டு மட்டும் விற்பனை செய்யப்பட்டுள்ள மருந்துகளின் மொத்த மதிப்பு ரூ.63 லட்சம் ஆகும். இதில் ரூ.13.23 லட்சம் தள்ளுபடி வழங்கப்பட்டு, ரூ.50 லட்சம் மதிப்பிலான மருந்து, மாத்திரைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் 90 ஆயிரம் பேர் மருந்துகள் வாங்கி பயனடைந்துள்ளனர்.

முதல்வர் மருந்தகங்களுக்கான மருந்துகள் கொள்முதல் என்பது மருந்துகள் உற்பத்தி செய்கின்ற இடத்திலேயே நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு, இடையீட்டாளர்கள் இன்றி நேரடியாக விற்பனை செய்யப்படுவதால் இந்த அளவிற்கு குறைந்த விலையில் மருந்துகள் பொதுமக்களுக்கு கிடைக்க வழிவகை ஏற்பட்டுள்ளது. சத்து மாத்திரைகள், வைட்டமின் மாத்திரைகள், நீரிழிவு மற்றும் ரத்த அழுத்தம் தொடர்பான மாத்திரைகளை இந்த முதல்வர் மருந்தகங்களில் குறைந்த விலையில் வாங்கி பயன்பெறலாம். மருத்துவர் ஆலோசனையின் பேரில் பயன்படுத்தப்படும் சில உயிர் காக்கும் மருந்துகள் மட்டும் மருத்துவர் சீட்டு இருந்தால் மட்டும் வாங்கி கொள்ளலாம். குறைந்த விலை முதல்வர் மருந்தகங்களை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

# ஆர்.கே.நகர் நாதக பொதுக்கூட்டத்தில் தேர்தல் விதிமீறி பேசிய சீமான் மீது வழக்கு பதிவு:

## தேர்தல் பறக்கும் படை நடவடிக்கை

சென்னை: ஏப்.11–

சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று முன்தினம் இரவு தண்டையார்பேட்டை வைத்தியநாதன் மேம்பாலம் அருகே நாம் தமிழர் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்தார். அப்போது 'தமிழக அரசியல் இலவசத்தை கொடுத்து மக்களை கெடுக்கிறார்கள் என்பது குறித்த சினிமா பட கதையை வீடியோவாக போட்டு பிரசாரம் மேற்கொண்டார்.

தேர்தல் விதிமுறைப்படி பிரசாரம் 10 மணிக்குள் முடிக்க வேண்டும். ஆனால், இரவு 10 மணி ஆனதால் இன்ஸ்பெக்டர் அவரிடம் சென்று நேரமாகிவிட்டது பிரசாரத்தை முடியுங்கள் என்றார். உடனே ஆவேசமான சீமான், காவல் ஆய்வாளரிடம் மேடையில் இருந்தபடியே திட்டினார். 10.16 மணி வரை அவர் பிரசாரம் மேற்கொண்டதால், சீமான் மீது தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் வழக்கு பதிவு செய்தனர்.

கூட்டம் முடிந்ததும் நாம் தமிழர் கட்சியை சேர்ந்த இரு தரப்பினரும் மாறி மாறி தாக்கி கொண்டனர். இதனால் பெரும் பதற்றம் நிலவியது. அதை தொடர்ந்து போலீசார் அவர்களை தடுத்து திருப்பி அனுப்பினார். இது பரபரப்பு ஏற்படுத்தியது.

# முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து தமிழ் மாநில தேசிய லீக் கட்சி ஆதரவு

சென்னை: ஏப்.11–

திமுக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள திமுக அலுவலகத்தில், 'தமிழ் மாநில தேசிய லீக்' கட்சியின் பொதுச்செயலாளர் திருப்பூர் அல்தாப் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகளான மாநில அமைப்புச் செயலாளர் சம்சுதீன், சென்னை மாவட்ட செயலாளர் கே.அல்லாபகஷ், தென்சென்னை மாவட்ட செயலாளர் திருவான்மியூர் எம்.ஹாஜா, இளைஞர் அணிச் செயலாளர் திருவான்மியூர் ரிஸ்வான் ஆகியோர் நேரில் சந்தித்து, நடைபெற இருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு 'தமிழ் மாநில தேசிய லீக்' கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், அனைத்து தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு பிரசாரம் செய்வதோடு, அவர்களின் வெற்றிக்கு 'தமிழ் மாநில தேசிய லீக்' கட்சி நிர்வாகிகள் தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தனர். இந்த சந்திப்பின் போது திமுக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# காரைக்குடி பிரச்சாரத்தில் பேசாமல் புறப்பட்டார் விஜய்:

## தாமதமாக வந்ததால் அனுமதி மறுப்பு



காரைக்குடி: ஏப்.11–

காரைக்குடி தொகுதியில் அனுமதிக்கப்பட்ட நேரத்தை கடந்து, பிரச்சாரம் நடக்கும் இடத்துக்கு வந்ததால், தவெக தலைவர் விஜய் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் காரைக்குடியில் விஜய் பேசாமல் திரும்பிச் சென்றார்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தொகுதியில் நேற்று விஜய் பிரச்சாரம் செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக காவல் துறை அனுமதியும் அளித்திருந்தது. காரைக்குடியில் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த 4 வேட்பாளர்களுக்கும் ஆதரவாக விஜய் நேற்று வாக்கு சேகரிப்பதாக இருந்தது. இதற்காக நேற்று காலையில் சென்னையில் இருந்து தனி விமானம் மூலமாக மதுரை வந்த விஜய், அங்கிருந்து தனது வாகனம் மூலமாக காரைக்குடிக்கு புறப்பட்டார்.

மதுரையிலிருந்து வரும் வழியில் தவெகவினர் திரண்டதால், அவர்களுக்கு கையசைத்தபடி விஜய்யின் வாகனம் ஆமை வேகத்தில் பயணித்தது. இடையில் திடீரென பிரச்சார வாகனத்தில் இருந்து இறங்கிய விஜய், அவருக்கு தயாராக வைக்கப் பட்டிருந்த சைக்கிளில் ஏறி பயணிக்க தொடங்கினார். இதனால் அவர் காரைக்குடிக்கு வருவதற்கு மிகவும் தாமதமானது.

மதுரையில் இருந்து காரைக்குடி வருவதற்க்கு உள்ள 90 கிலோ மீட்டர் தூரத்தை கடக்க விஜய்யின் வாகனம் 4 மணி நேரத்தும் மேல் எடுத்துக்கொண்டது. இதனால் விஜய், காரைக்குடிக்கு மதியம் 2.30 மணிக்கு மேல்தான் வந்தார். விஜய் காரைக்குடியில் பிரச்சாரம் செய்ய நண்பகல் 12 மணி முதல் மதியம் 2.30 மணி வரை அனுமதி அளிக்கப் பட்டிருந்தது.

காவல் துறை அனுமதித்திருந்த நேரத்தை தாண்டி காரைக்குடிக்கு விஜய் வந்ததால், அவருக்கு பிரச்சாரம் மேற்கொள்ள அனுமதி மறுக்கப் பட்டது. இதனால், பிரச்சாரம் நடக்கும் இடத்தில் கூடியிருந்த தொண்டர்களிடம் பேசாமலேயே விஜய் அங்கிருந்து புறப்பட்டார். மேலும், காரைக்குடியில் ரோடு ஷோ மேற்கொண்ட விஜய், தவெக வேட்பாளர் பிரபுவுக்கு வாக்களிக்கும்படி சைகையின் மூலம் தெரிவித்துவிட்டு புறப்பட்டார்.

# துரந்தர் 2' படத்துக்கு தடை விதிக்க சென்னை உயர் நீதிமன்றம் மறுப்பு

'துரந்தர் 2' திரைப்படத்துக்கு தடை விதிக்க சென்னை உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது.

பாலிவுட் சினிமாவின் முன்னணி ஹீரோவான ரன்வீர் சிங் நடிப்பில் பிரம்மாண்டமான பொருட்செலவில் உருவாகி வெளிவந்துள்ள திரைப்படம் 'துரந்தர் 2'. இத்திரைப்படம் கடந்த மாதம் 19ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகியுள்ளது. இந்நிலையில், இத்திரைப்படத்தை தமிழக திரையரங்குகளில் நிறுத்தி வைக்க வேண்டும் என

மதுரையைச் சேர்ந்த டி. ராகேஷ் என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார். தேர்தல் நடத்தை விதிகள் கடந்த மார்ச் 15ஆம் தேதி முதல் அமலில் உள்ள நிலையில், இப்படத்தில் அரசியல் தொடர்பாக ஒரு சார்பான கருத்துகள் இருப்பதால் 'துரந்தர் 2' திரைப்படத்தை தமிழக திரையரங்குகளில் தற்போதைய நிலையில் தடை விதிக்க வேண்டும் என கோரிக்கை வைத்திருந்தார்.

தேர்தலுக்கு பின் துரந்தர் 2 திரைப்படத்தை தமிழகத்தில் வெளியிட அனுமதிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மதாதிகாரி, நீதிபதி அருள் முருகன் அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் சார்பில், தமிழகத்திலும் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான மத்திய அரசின் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் தேசியப் பாதுகாப்பு கொள்கைகளை இப்படம் பாராட்டும் வகையில் உள்ளதால் இத்திரைப்படத்தின் திரையிட்டிருப்பது, நடைமுறையில் உள்ள தேர்தல் நடத்தை விதிகளுக்கு எதிரானது என்று வாதிட்டிப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதிகள், மனுதாரர் ஆதாரமற்ற ஒரு குற்றச்சாட்டை முன்வைப்பதாகவும், திரைப்படத்தின் எந்தப் பகுதிகள் தேர்தல் நடத்தை விதிகளை மீறுகின்றன என்பதைக் குறிப்பிடவில்லை என தெரிவித்தனர்.

மத்திய திரைப்படச் சான்றிதழ் வாரியம் வழங்கிய சான்றிதழை மனுதாரர் எதிர்க்கவில்லை எனக் கூறி வழக்கை தள்ளுபடி செய்தனர்.

# மத்திய அரசின் எடுபிடியான தேர்தல் ஆணையம்: வைகோ காட்டம்

மொடக்குறிச்சி: ஏப்.11–

மொடக்குறிச்சி தொகுதி மதிமுக வேட்பாளரை ஆதரித்து மதிமுக பொதுச்செயலாளர் வைகோ பிரசாரத்தில் ஈடுபட்டார். அப்போது அவர் பேசியதாவது: 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தை பாழ்படுத்தியது மோடி அரசு, அதற்கான நிதியையும் தடுத்து நிறுத்தியது. இப்போது 100 நாள் வேலை திட்டத்தை அதிகப்படுத்திப் தரப் போவதாக பொய் சொல்கிறார்கள். தேர்தல் ஆணையம் ஒன்றிய அரசின் எடுபடியாக மாறிவிட்டது. தலைமை செயலாளர் மாற்றிவிட்டு முன்பு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் தனிசெயலாளராக இருந்தவரை தலைமை செயலாளர் அறிவிப்பது பாரபட்சம் மட்டும் இன்றி, ஒரு சார்பு ஆதரவு செயல்படுவதற்காக இந்த அறிவிப்பை தேர்தல் ஆணையம் செய்து இருகின்றது.

முதல்வர் வாகனம் சோதனை செய்யப்பட்டது. யார் காரில் சென்றாலும் சோதனை செய்யலாம் அது சரி? என்றால் மோடி செல்லும் காரில் சோதனை செய்வீர்களா? அமித்ஷா வாகனத்தை தேர்தல் ஆணையம் சோதனை செய்யுமா? அண்ணாவால் தோற்றுவிக்கப்பட்ட இயக்கத்தை அழித்துவிடுவேன் என்று அமித்ஷா சொல்லலாமா? தமிழர்கள் தமிழ்நாட்டு நலனுக்காக தமிழர்கள் நலனுக்காக அண்ணா தோற்றுவிக்கப்பட்ட இயக்கத்தை அழிப்போம் என்று செல்வதற்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்கும். இந்த சட்டமன்ற தேர்தலில் திமுக அமோக வெற்றி பெற்று தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421